பழைய மாணவர் தின சிறப்பு மலர்

# சாரல்

இதழ் : 01

ஆனித்திங்கள் 2010

OBA அரையாண்டுச் செய்திமடல்

பழைய மாணவர் சங்கம்
தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## அதிபரின் வாழ்த்துச் செய்தி

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து நீண்ட காலம் கடந்திருந்தும் தனது வளர்ச்சிப் பாதையில் தொடர்ச்சியான கடந்த 20 வருடங்கள் சிறப்பாக பணியாற்றி வருகின்றது. இவ்வேளையில் அதன் செய்தி மடலாக "சாரல்" வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன். அதற்கான இச்செய்தியை வழங்க வாய்ப்பு கிடைத்தமையையிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

இக்கல்லூரி அதிபர் என்ற வகையில் ஓர் முன்னுதாரணமாக பழைய மாணவர் சங்கத்தையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தையும் பக்க பலமாகக் கொண்டு கல்லூரியை வழிநடாத்துவதில் பெருமை அடைகின்றேன். இக்கல்லூரி சமூக உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கான பாலமாகவும், அபிவிருத்திக்கு துணையாகவும் இவ் அமைப்புக்கள் மிகச் சிறப்பாக செயற்படுகின்றன.

பழைய மாணவர் சங்கம் பௌதிகவள அபிவிருத்தியிலும் கல்வி இணைப்பாடவிதான அபிவிருத்தியிலும் மிகப் பொருத்தமான முறையில் பங்களிப்புச் செய்து வருவது பாராட்டுக்குரியதாகும். கல்லூரியின் பழைய மாணவர் தினமாக யூன் 30ம் திகதியை 2004ம் ஆண்டு அடையாளப்படுத்தியது முதல் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியான ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறுவதும், இதன் மூலம் பழைய மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், தற்போதைய மாணவர்கள் ஆகியோரிடையே மிக நெருக்கமானதும் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதுமான உறவு மேலோங்கி துரித வளர்ச்சி கண்டிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தமது செயற்பாடுகள் கல்லூரித் தேவைகள், சாதனைகள்,நிகழ்வுகள் ஆகியவற்றை செய்தி மடல் ஒன்று மூலமாக வெளியிட்டு கல்லூரிச் சமூகத்தில் பிணைப்பை ஏற்படுத்த எடுத்துள்ள முயற்சிக்கு பழைய மாணவர் சங்கத்தினருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் "சாரல்" செய்தி மடல் ஒவ்வொரு அரையாண்டுக்கும்சிறப்பாக வெளிவர வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

திரு.மா.இராசரெத்தினம்
(அதிபர் / தலைவர்)



## ஆசிச்செய்தி

"கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" எனப் பெயர் பெற்ற திருக்கோணமலையில் இந்துப் பண்பாட்டின் இருப்பிடமாய் விளங்கும் புகழ்பூத்த ஆண்கள் கல்லூரியான இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியால் வெளியிட இருக்கும் பழைய மாணவர் சங்க அரையாண்டு செய்தி மடலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

மானிடத் தன்மைகளுக்கு அச்சாணியாக நின்று திருக்கோணமலை மாவட்டத்தில் புதுமைக்கும் புனிதத்திற்கும் இந்து சமயப் பண்பாட்டிற்கும் முத்திரை பதித்த பெருமைகளோடு இயங்கி வரும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கம் ஆற்றி வரும் பணி அளப்பெரியது.

பாடசாலையின் கல்விச் செயற்பாட்டிற்கு மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் பழைய மாணவர்கள் உள்நாட்டிலிருந்து, வெளிநாட்டிலிருந்து ஆற்றிவரும் சேவைகள் வரவேற்கத்தக்கது. இது போன்று இனிவரும் காலங்களிலும் இக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளிற்கும். வளர்ச்சிக்கும் பழைய மாணவர் சங்கம் அயராது உழைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆசி வேண்டி வாழத்துகின்றேன்.

"வேதாகமாமணி"
பிரம்மஸ்ரீ. சோ.இரவிச்சந்திரக் குருக்கள்
அருள்மிகு. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருக்கோணமலை

வெளியீடு : OBA, Trinco, Hindu.
E-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு. மா. இராசரெத்தினம்
பதிப்பாசிரியர் : திரு. ச. பாரதிநாதன்
உதவி பதிப்பாசிரியர் : திரு. ச. சிறிதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அரையாண்டு செய்தி மடல் ஒன்றை வெளியிட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

கிழக்கு மாகாணத்தின் முன்னணிக் கல்வி நிறுவனங்களில் ஒன்றான இக்கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கம் கொண்டுள்ள ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகும். கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிபருக்கு துணையாக நின்று பணியாற்றி வருவது கல்லூரிக்கு ஒரு ஆதரவுத் தளமாக அமைந்துள்ளது.

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பரந்து வாழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளில் இணைத்துக் கொள்வதற்காக பழைய மாணவர் சங்கம் அண்மைக்காலமாக எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் வரவேற்கத் தக்கவையாகும்.

கல்லூரியின் கல்விசார் நடவடிக்கைகளுக்கும் பௌதிக வளவிருத்தி நடவடிக்கைகளுக்கும் துணையாக உள்ள பழைய மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளை அங்கத்தவர்களுக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் செய்திமடல் மூலமாகத் தெரிவிக்கையில் அது பழைய மாணவர்கள் மத்தியில் ஒரு தகவல் பிணைப்பை ஏற்படுத்தும்.

இத்தகைய தகவல் பிணைப்பானது கல்லூரியின் அபிவிருத்தியை பொறுத்து சாதகமான போக்குகளை ஏற்படுத்தும் என நம்புகின்றேன். கல்லூரியின் வளர்ச்சி பற்றி சிந்திக்கவும், பங்கெடுத்துக் கொள்ளவும் பழைய மாணவர்கள் தூண்டப்படுவர்.

சமூகத்தில் வெற்றி பெற்ற ஒரு கல்வி நிறுவனமாக தி/இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி தனது பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அத்தகைய வெற்றிக்கு உறுதுணையான ஒரு சக்தியாக பழைய மாணவர் சங்கம் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.சி.தண்டாயுதபாணி
பிரதிச் செயலாளர்.
கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சு
கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.



## Message of felicitation.

I am pleased to send this note at the request of Mr. S.Barathinathan( former secretary) and Mr.T.Haritharan ( present secretary) . These two young enthusiastic old boys with the policy of "never say die "called on me several times detectives in Sherlock Holmes mysteries, grilling me with all sorts of question to solve the puzzle of the college O.B.A. in the sixties. I am sorry that I could not be of much assistance, as passage of time over five decades, back of contacts with cotemporaries, college etc. it was not possible to trace the full history,

However, I can remember very well that there was no trace or evidence of an O.B.A. in the sixties. A few of us drafted a constitution even obtaining a copy of the constitution from Batticaloa Central College. In the constitution drafted by us provision was specifically made to elect the president of the O.B.A. instead of an ex officio to avoid being an appendage of the college,in view of the situation prevailing at that time.

I could recollect that I was the president of this O.B.A. with Mr.J.A.Jayah as secretary. This O.B.A would have functioned around 1963 as the first function was to honour veteran teacher Mr.V.K.Kulanthaivelu popularly known as Gopal Master, a large portrait of him was unveiled on this occasion. Thereafter in or around 1968, a farewell to Mr K, Sivapalan was held unveiling his large portrait by the O.B.A.

Further, I could recollect that in mid 1970, I being the president of the O.B.A was called upon by the then principal Mr.Elayathamby to welcome the chief guest Mr.Lionel Fernando G.A. Trincomalee,at our inter house sports meet. After my transfer to out of Trincomale in March 1971, I am not aware of the fate of this O.B.A which had functioned thereafter.

Congratulation and best wishes to the O.B.A.May goddess Kali Ambal and lord Konesar shower their choicest blessings them to grow from strength to strength be of even greater service to the college and Trincomalee in general.

**Mr.M.Pathmanathan. B.A.**
**Former O.B.A president (in 1963).**



## தி/இ. கி. ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும்

திருக்கோணமலையின் இதயத்தில் அமர்ந்திருந்து ஆயிரக்கணக்கான கல்விமான்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும் பற்றி இனி ஆராய்வோம் 1940 களின் தொடக்கத்தில் இருந்து பழைய மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருந்த போதிலும் பழைய மாணவர் சங்கம் ஓர் அமைப்பு வடிவில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதனை ஆய்வின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கிறது. இக்காலப்பகுதியில் இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளை சீர்செய்யவும் பழைய மாணவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்புகளும், உதவிகளும் வழங்கப்பட்டிருந்ததையும் அறியமுடிகின்றது. இவ்வாறு 1940 களின் பிற்பகுதிவரை பழைய மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்த போதிலும் 1950 களில் கூட ஒரு பழைய மாணவர் சங்கம் நிறுவப்படவில்லை.

ஆனால் 1960 களின் தொடக்கத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உருவாக்கலுக்கான முயற்சிகள் அன்றைய பழைய மாணவர்களாகிய திரு.மு.பத்மநாதன், திரு.பா.விஜயநாதன் மற்றும் திரு.ஜே.ஏ.ஜயா போன்றவர்களால் எடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் இருந்து பழைய மாணவர் சங்கத்திற்கான யாப்பு தருவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பழைய மாணவர் சங்கம் 1963ம் ஆண்டு இக்கல்லூரியில் நிறுவப்பட்டிருந்ததை இச்சங்கத்தின் தலைவராக விளங்கிய திரு.மு.பத்மநாதன் அவர்களுடனான நேர்காணல் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. இச்சங்கத்தின் செயற்பாடுகள் 1971ம் ஆண்டு காலம் வரை தலைவர் மு.பத்மநாதன் மற்றும் செயலாளர் திரு.ஜி.ஏ.ஜயா அவர்களின் நிர்வாகத்தில் திறம்பட செயற்பட்டிருந்ததை அறியமுடிகிறது. பின்னர் திரு.மு.பத்மநாதன் அவர்கள் இடம் மாற்றம் பெற்று சென்றதன் பின் இச்சங்கத்தின் தலைவராக ஜனாப் S.M.A ஜமால்டீன் அவர்களும் செயலாளராக திரு. பா. விஜயநாதன் அவர்களும் இச்சங்கத்தினை நிர்வகித்து வந்தனர். இச்சங்கம் 1970 களின் நடுப்பகுதிவரை செயல்பட்டுக் கொண்டிருந்ததையும் பின்னர் ஒரு செயலற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்ததையும் காணமுடிகின்றது. எனினும் இச்சங்கம் 1977ம் ஆண்டு மீண்டும் புத்துயிர் பெற்று இயங்கிக் கொண்டிருந்தமையையும் அறியமுடிகின்றது. பின்னர் 1970 களின் இறுதிக்கால கட்டத்தில் செயலற்றுப் போய் மீண்டும் 1980 களின் தொடக்கத்தில் பழைய மாணவர்களின் முயற்சியினாலும் அன்றைய கல்லூரியின் அதிபர் திரு.அ. சிவலோகநாதன் அவர்களின் விடாமுயற்சியினாலும் சங்கம் மீண்டும் 1982ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் தலைவராக திரு. கு. தயாநிதியும், செயலாளராக திரு. எஸ். ஜெகநாதனும் சங்கத்தினை நிர்வகித்து வந்தனர்.

இவ்வாறு தொடர்ந்த சங்கத்தில் 1983ம் ஆண்டு தலைவராக Dr. சத்தியமூர்த்தியும் செயலாளராக திரு.ஆர். சண்முகநாதனும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இப்படியே முழுமூச்சுடன் இயங்கிக் கொண்டிருந்த சங்கம் 1983ம் ஆண்டு ஏற்பட்ட ஆடிக்கலவரத்தின் தாக்கத்தினால் ஒரு முடங்கல் நிலைக்கு தள்ளப்பட்டு பின் செயலற்றுப் போனது. அதன்பிற்பாடு சங்கம் 1980 களின் இறுதிவரை உயிர்பெற்றிருக்கவில்லை என்பது உண்மை. இவ்வாறு ஒரு நீண்ட நிலையான ஆரோக்கியமான நிலையில் சங்கம் நிற்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்த வேளையில்தான் 1990ம் ஆண்டு கல்லூரியின் அதிபராக திரு.சி. தண்டாயுதபாணி அவர்கள் கடமையினைப் பொறுப்பேற்றார். சங்கம் முன்னைய காலங்களில் முகம் கொடுத்துவந்த தளம்பல் நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் ஒரு இடையறாத, இறுக்கமான முயற்சியின் மூலம் Dr.கு.ஹேமந்திரா, திரு.சி. சந்திரசொரூபன் மற்றுமு் திரு.கு. தயாநிதி போன்றோர்களின் கூட்டுமுயற்சியுடன் மீண்டும் சங்கத்தினை 1991ம் ஆண்டு கட்டியெழுப்பினார். இச்சங்கத்தில் தலைவராக Dr.கு. ஹேமசந்திராவும், செயலாளராக திரு. சி. சந்திரசொரூபனும் செயற்பட்டு வந்தனர். 1991ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை நிர்வகிக்கப்பட்டு வந்த சங்கம் 1995ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பு திருத்தத்தின் பிரகாரம் கல்லூரியின் அதிபரே தலைவராக இருக்கவேண்டியதன் காரணத்தினால் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை திரு.சி. தண்டாயுதபாணி அவர்கள் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். இக்காலத்தில் சங்கத்தின் செயலாளராக திரு.இ.உமாகாந்தன் அவர்கள் செயற்பட்டு வந்தார். 1995ம் ஆண்டு தொடக்கம் 1999ம் ஆண்டு காலப் பகுதியில், கல்லூரியின் நூற்றாண்டு விழா 1997ம் ஆண்டு கொண்டாடப்பட வேண்டியிருப்பதன் காரணத்தினால் பழைய மாணவர் சங்கம் ஒரு முழு முனைப்புடன் செயற்பட்டு 1998ம் ஆண்டு மாசிமாதம் கல்லாரியின் நூற்றாண்டு விழா நினைவாக ஒரு தொகுதிக் கணணியினை தேவையான கணனி தளபாட வசதிகளுடன் கையளித்தது. இதற்காக ஒரு அறை செப்பனிடப்பட்டு குளிரூட்டப்பட்டு பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அன்றைய காலத்தில் இந்நிகழ்வு சங்கத்திற்கு ஒரு பெருமையை தேடித் தந்திருந்தது. இக்காலப்பகுதியில் சங்கம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, தனது செயல்பாடுகளையும் விரிவாக்கிக் கொண்டு செயற்பட ஆரம்பித்தது.

1999ம் ஆண்டு தொடக்கம் 2004ம் ஆண்டுவரை சங்கம் பலவிரிவாக்கல் திட்டங்களுடன் தனது நிதியிருப்பினையும் வளர்த்துக் கொண்டு வேகமாகவும், நிதானமாகவும் பயணிக்க தொடங்கியது. இக்காலப் பகுதியில் தான் திரு.சி. தண்டாயுதபாணி அவர்களினால் 2003ம் ஆண்டு இலண்டனுக்கு மேற்கொண்டிருந்த கல்விச்சுற்றுலாவின் போது இலண்டன் மாநகரத்தில் வாழும் பழைய மாணவர்களை ஒன்று திரட்டி இலண்டனிலும் ஒரு பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்குவதற்கு வழி சமைத்தார். இவ்வாறு பழைய மாணவர் சங்கத்திற்கு ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்கித் தந்த திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் பதவி உயர்வு பெற்று வலயக்கல்விப் பணிப்பாளராக மாற்றலாகி சென்றதன் விளைவால் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. மா. இராஜரெட்ணம் அவர்கள் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். சங்கத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற புதிய அதிபர் சங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் தொய்வில்லாமல் மேலும் மேம்படுத்திக் கொண்டு சங்கத்தினை வளர்த்து வந்தார். இவரின் காலப்பகுதியில் கவர்ச்சிகரமான ஒரு நிதியிருப்புடன், புலம்பெயர்வாழ் பழைய மாணவர்களை நோக்கி கரங்களை நீட்டி அவர்களையும் அணைத்துக் கொண்டு செயற்பட்டு வந்தார். இந்நிலையில் சங்கத்தின் செயலாளர்களாக கடமையாற்றியவர்களின் பங்களிப்பினையும் சுட்டிக்காட்டல் வேண்டும். 1999ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டுவரையும் பின் 2004ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டுவரையும் பிற்பாடு 2007ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு ஜனவரிவரையும் பின்னர் 2009ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு பங்குனி மாதம் வரையும் முறையே சங்கத்தில் திரு. இ. ஜெயமோகன், திரு. இ. உமாகாந்தன் மற்றும் திரு. ச. பாரதிநாதன் அவர்கள் திறம்பட கடமைபுரிந்திருந்தார்கள். 2010 தொடக்கம் திரு. தி. ஹரிதரன் அவர்கள் திறம்பட செயற்பட்டு வருகிறார். திரு. கு. தயாநிதியின் தலைமையில் கனடாவில் 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கத்தினால் 2003ம் ஆண்டு "Dr. ஞாணி புலமைப்பரிசில் நிதியம்" ஒன்று ஆரம்பிக்கப்பட்டு வசதி குறைந்த மாணவர்களுக்கு அந்நிதியில் இருந்து உதவியளிக்கப்பட்டு வந்தது. பழைய மாணவர் சங்கத்தின் ஏற்றத்தினை எடுத்து இயம்ப முனைகையில் கிட்டதட்ட ஐந்து தசாப்த காலங்களாக சங்கம் இயங்கிக் கொண்டு வந்தாலும் கூட இறுதி இரண்டு தசாப்த காலங்களாகிய 1990ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டுவரையும், 2000ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரையிலுமான இக்காலப்பகுதியினைத்தான் சங்கத்தின் "பொற்காலம்" என வர்ணிப்பதில் அர்த்தம் உள்ளது. ஏனெனில் இன்று ஓங்கிவளர்ந்து ஒரு விருட்சம்போல் தன்னை உதாரணம் காட்டி நிற்கும் இச்சங்கத்திற்கு 1990 களில் தொடக்கத்தில்தான் ஒரு பலமான அஸ்திவாரம் இடப்பட்டது என்று சொன்னால் அதில் எவரும் முரண்பட்ட கருத்துக்களை முன்வைக்க முடியாது. இக்காலப்பகுதியில் தான் சங்கம் ஓர் அங்கீகாரத்தினைப் பெற்று அழுத்தமாக தடம் பதித்து சென்றது. பின்னைய தசாப்த காலத்தில் சங்கம் பலபாரிய செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் ஒரு நியாயமான நிதியிருப்புடன், புலம்பெயர் வாழ் பழைய மாணவர்களின் புதிய உறவுடன் தனது "தூரநோக்கினை" நோக்கி பயணிக்க தொடங்கியிருந்தது என்று சொன்னால் அது நிதர்சனம். இன்று ஆலம்விருட்சம்போல் விரிந்து, பரந்து, வியாபித்துக் கொண்டு செயற்பட்டு வரும் இச்சங்கத்திற்கு ஆயிரமாயிரம் விழுதுகள் போல் ஆதாரமாய் நின்று உதவி வருவது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்கள் என்றால் அது மிகையல்ல.

- நன்றி -

நிர்வாகசபை உறுப்பினர், திரு. ச. பாரதிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியரின் பார்வையில் பழைய மாணவர்சங்கம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகள் எமது மனதில் நிறைந்து நிற்கின்றன. மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கம் உறுதுணையாகச் செயற்படுகிறது என்பது எம்மைப் பெருமைப்பட வைக்கிறது. கல்லூரியின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும் பழைய மாணவர் சங்கத்தின் பங்கும் கூடவே அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

1998 காலகட்டத்தில் கணணிச் செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டபோது, எமது மாவட்டத்திலேயே முதன் முதலாகக் கல்லூரிக்கு கணணிக் கூடம் அமைத்துத் தந்து மாணவர்களை கணணிக் கல்வியின் பால் ஈர்த்தெடுத்த முயற்சியை மாணவர் சமூகம் என்றும் மறந்து விடாது.

இதே போன்று எமது கல்லூரிக்குரிய மைதானம் நீண்ட காலத்துக்கு முன்பே ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அதனை எமக்கென வரையறுக்க முற்பட்ட போது பல்வேறு நெருக்கடிகள் எழுந்தன. அப்போதெல்லாம் கல்லூரி நிர்வாகத்துக்குப் பக்கபலமாக நின்று பழைய மாணவர் சங்கம் செயற்பட்டது. இதனால் இன்று எமக்கென தனியான மைதானம் கிடைத்தது.

இது மட்டுமன்றி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்காக ஒரு காணியைப் பெற வேண்டிய ஒரு தேவை எமக்கு இருந்தது. அவ்முயற்சியில் கல்லூரி நிர்வாகம் ஈடுபட்டபோது பல்வேறு தடைகள் ஏற்பட்டன. அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமக்குப் பக்கத்துணையாக நின்று ஆத்மபலம் ஊட்டியது பழைய மாணவர் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தேசிய மட்டத்தில் தெரிவாகுவதை ஊக்குவிக்கும் நோக்கில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளிலும் பழைய மாணவர் சங்கம் ஈடுபட்டு வருகின்றது. அதே போன்று வறிய மாணவர்கட்டு நிதியுதவி வழங்கி அவர்களைக் கல்வியின்பால் ஈடுபட வைப்பதிலும் எமது பழைய மாணவர் சங்கம் முன் நிற்கின்றது.

பெயருக்கொரு பழைய மாணவர் சங்கம் என்றில்லாமல் செயற்பாட்டுத் திறன் மிக்க சங்கமாக மிளிர்வது பாராட்டத்தக்கது. காலத்திற்குக் காலம் தெரிவாகும் நிர்வாகிகள் மிகவும் உற்சாகத்துடன் செயற்படுவது கல்லூரியின் பால் அவர்கள் கொண்டிருக்கும் பற்றையும் விசுவாசத்தையும் காட்டி நிற்கின்றது.

இவற்றை விட எமது பழைய மாணவர் சங்கத்திடம் ஒரு விஷேட பண்பைக் காண்கின்றோம். அதாவது கல்லூரியின்நிர்வாகச் செயற்பாட்டிற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலையிடாத ஒரு உயரிய பண்பு அவர்களிடத்தே காணப்படுகிறது. இதனால் பாடசாலை சுயமாக இயங்கக்கூடிய ஒரு சூழலை அவர்கள் ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள். இத்தகையதொரு உயரிய பண்பு என்றும் போற்றுதற்குரியது.

வருடா வருடம் நிர்வாகிகளைத் தெரிவு செய்வது, வருடாந்தம் ஒன்று கூடல்களை நடத்துவது என தொய்வில்லாமல் பழைய மாணவர் சங்கம் செயற்படுவது ஒரு உயிர்ப்பான செயற்பாடாக எம்மால் கருதப்படுகிறது. பல்லேறு தனிப்பட்ட வேலையிலும், நேர நெருக்கடியிலும் பழைய மாணவர் சங்கத்தை ஒரு செயற்பாடுடைய சங்கமாக அவர்கள் இயங்கவைப்பது இவர்களின் சிறந்த பண்புக்கூறாக நாம் கருதுகின்றோம்.

பாடசாலையை மறக்காத எமது பழைய மாணவர்கள் எமது கல்லூரியின் வளர்ச்சியில் தமது நேரத்தையும் ஆற்றலையும் செலவிட்டு எமது கல்லூரியை மென்மேலும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மன நிறைவைத் தருகின்றது. எமது கல்லூரியின் வளர்ச்சியிலும் சாதனையிலும் அவர்களுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு என்பது எமது கருத்தாகும். தொடர்ந்தும் இவ்வாறே அவர்களின் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லுவார்கள் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

திரு.த. சச்சிதானந்தன் (ஆசிரியர்)
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## நிதி விடயங்கள்

தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிதி நடவடிக்கைகள் இலங்கை வங்கியில் (நகரக்கிளை, திருகோணமலை) நடைமுறைக் கணக்கினையும் ஹட்டன் நஷனல் வங்கியில் (பிரதான கிளை, திருகோணமலை) சேமிப்புக் கணக்கினையும் கொண்டு இயங்கி வருகின்றது. அத்துடன் நிலையான வைப்புத் தொகையும் ஹட்டன் நஷனல் வங்கியிலேயே பேணப்படுகிறது.

முன்னைய காலங்களைவிட தற்போது நிதி நிலைமையில் ஓரளவு ஸ்திரத்தன்மை காணப்படுவதுடன் எமது சங்க தலைவரின் வாசகத்திற்கு ஏற்ப "ஒரு பழைய மாணவன் தனது வாழ்நாளில் ஒருமுறையேனும் பாடசாலைக்கு நிதி உதவி அளித்தல்'' பல பழைய மாணவர்கள் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், நிதி உதவிகளை அளித்த வண்ணம் உள்ளனர். இவ்வாறு கிடைக்கும் நிதி உதவிகள் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளுக்கான ஆக்கபூர்வமாக பல திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

## புலமைப்பரிசில் திட்டம்

இத்திட்டத்தில் ஆரம்பத்தில் க.பொ.த (உ/த) மாணவர்களே முதலில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டம் 2010 தை மாதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

நோக்கம் : கல்வி முன்னேற்றத்திற்கு பணம் தடையாக உள்ள மாணவர்களுக்கு பணத்தின் மூலமாக புலமைப்பரிசில் வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்தல்.

தெரிவு செய்யும் முறை :- ஒவ்வொரு வகுப்பிலும் சராசரி புள்ளிகள், புள்ளிகளுக்குமேல் பெற்றுக் கொள்ளும் மாணவர்களில் பணம் தொடர்பான பிரச்சனை உள்ளவர்களைத் தெரிவு செய்தல் இவ்வாறான தெரிவு செய்தலின் படி கல்வித் தரத்தில் குறைவான நிலையில் உள்ள மாணவர்களும் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில் கல்வியில் முன்னேறக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு செய்தல் :- புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் பெற்றோர் பாதுகாவலர்களினால் மாணவர்களது கல்வி முன்னேற்றம் தொடர்பாக அக்கறையுடன் கவனிக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் மாதாந்தம் அவர்களது ஒப்புதலுடனேயே புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. அத்துடன் மாதாந்தம் வகுப்பு ஆசிரியரின் சிபார்சும் பெறப்படுகின்றது. இதனைவிட 3 அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை கல்வி வளர்ச்சி தொடர்பாக ஒரு குழுவினரால் பரிசீலனை நடத்தப்படும். மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டின் போது கல்வி முன்னேற்றம் போதாது எனக் கருதப்படுமிடத்து புலமைப்பரிசில் கொடுப்பனவு நிறுத்தப்படும் சாத்தியமும் உள்ளது.

கொடுப்பனவு முறை : புலமைப் பரிசில் கொடுப்பனவிற்கு என புதிதாக ஒரு வங்கிக் கணக்கு (நடைமுறைக் கணக்கு இலங்கை வங்கி நகரக்கிளை, திருகோணமலை) இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாகவே புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்படுகிறது. அத்துடன் புலமைப்பரிசில் பெறும் சகல மாணவர்களுக்கும் பாடசாலைக் கூட்டுறவு சங்கத்தில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொருவரினதும் கணக்கினூடாக பணம் வழங்கப்படுகின்றது.

திரு.ச. பரமேஸ்வரன்
பொருளாளர், பழைய மாணவர் சங்கம்

## 2004ம் ஆண்டு தொடக்கம், பழைய மாணவர்தின நிகழ்வில் கௌரவத்தினையும், பாராட்டுதல்களையும் பெற்றவர்கள்.

பழைய மாணவர் சங்கத்தின் பழைய மாணவர் தினம் யூன் 30ம் திகதியாகும், இந்நிகழ்வு 2004ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்நிகழ்வின் ஒரு சம்பிரதாய பூர்வமான நிகழ்வாக பழைய மாணவர்கள் மற்றும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுக்கொண்டு வருகின்றார்கள்.

2004ம் ஆண்டு தொடங்கிய இந்நிகழ்வு 2005ம் ஆண்டு தவிர்க்கமுடியாத காரணத்தினால் தவிர்க்கப்பட்டிருந்தது. பின்னர், 2006ம் ஆண்டு தொடக்கம் முறையாக நடந்தேறிவருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

இதுவரையில் கௌரவிக்கப்பட்டோர்கள்.



1. திரு.சு. கிருஷ்ணகுமார்.
மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச 24 மணிநேர நடைப்போட்டி ஒன்றில் கலந்து கொண்ட 148 போட்டியாளர்களில் 48வது இடத்தினை அடைந்து மலேசியா அரசினால் கௌரவிக்கப்பட்டிருந்தார். இம்மாணவனை இனம் கண்டு பழைய மாணவர் தின நிகழ்வு 2006 யூன் 30ல் பழைய மாணவர் சங்கத்தினால் இம்மாணவன் கௌரவிக்கப்பட்டிருந்தார்.



2. திரு.கரிகரன் ரவிராஜ்
தனது இளம் வயதிலேயே (IBSL) சான்றிதழைப் பெற்றமைக்காக இவர் கௌரவிக்கப்பட்டார்.



3. திரு.ரா.பிரணவேந்திரா
கனிஷ்டதேசிய மட்ட குண்டு எறிதல் நிகழ்வில் இம்மாணவன் 1வது இடத்தினை பெற்று கௌரவிக்கப்பட்டிருந்தார். இம் மாணவனையும் பழையமாணவர் தின நிகழ்வு 2008 யூன் 30ல் பழைய மாணவர் சங்கம் கௌரவித்து இருந்தது.



4. திரு.சி. காண்டீபன்
மிருதங்க கலைத்துறையில் நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்றமைக்காக ஜப்பான் இலங்கை நட்புறவு சங்கத்தினால் "புங்கா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார். இப் பழைய மாணவனையும் பழைய மாணவர் தின நிகழ்வு 2009 யூன் 30ல் பழைய மாணவர் சங்கம் கௌரவித்து இருந்தது.

## 2010யூன் 30ல், பழைய மாணவர்தின நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளோர்

2010யூன் 30ல், பழைய மாணவர்தின நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளோர் யாவரும் தங்களது தொழில் துறையில் உன்னத நிலையினை அடைந்தமைக்காகவும்; IESL நிறுவனத்தில் உயரிய அந்தஸ்தினை பெற்றமைக்காகவும், 1960களின் தொடக்கத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உருவாக்கலுக்கு வித்திட்டமைக்காகவும் முறையே திரு.சி.தண்டாயுதபாணி, Dr.அ.யோகானந்தமூர்த்தி, Eng. ந.சுதேசன் மற்றும் திரு.மு.பத்மநாதன் அவர்கள் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.



**திரு. சி. தண்டாயுதபாணி**



**Dr. அ. யோகானந்தமூர்த்தி**



**Eng. ந. சுதேசன்**



**திரு. மு. பத்மநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contributions of the O.B.A for the college.

**From 1940 till 1950.**

Two class rooms were provided by the O.B.A. Library building was handed over by the old students. After the 2nd world war, old students worked jointly with teachers to restore the educational environment in this College.

**From 1950 till 1960.**

No documentary evidence to the contributions given by the O.B.A.



**From 1960 till 1970.**

The first O.B.A was established. The farewell functions of the senior teacher Mr.K.Kulanthaivetpillai and the principal MrK.Sivapalan were conducted by the O.B.A.

**From 1970 till 1980.**

Activities of the O.B.A continued.



**From 1980 till 1990.**

Again O.B.A was formed. Open stage foundation was built by the O.B.A. Letters had been forwarded to the identified land owners to purchase the land, but could not achieve due to disapproval of the land owners.

**Fist A.G.M period from 1991 till 1994.**

The statue of the former principal swami Vipulanander was established and handed over by our O.B.A president Dr .K.Hemachandra. A best student who obtained four very Good passes in A/L Mathematics was honoured.

**A.G.M period from 1994 till 1999.**

In 1995, a best student who obtained four very good passes In A/L commerce was honoured by the O.B.A. The year 1997 was the centenary of this college. For celebrating this year, computer unit with adequate furniture was handed over by the O.B.A Funded to the cricket big match in 1997. Funded to the scout student to Malaysia scholarship.



**A.G.M period from 1999 till 2004.**

On 14th August 2000,a Get -Together of old students was conducted by O.B.A successfully. Fund raised nearly Rs 190000.00.via, beneficial show. Fax machine and the amplifier were handed over by the O.B.A Scholarship student. who achieved first rank at national level was honoured by the O.B.A The relevant teacher also was honoured by our London O.B.A vice president Mr. Jeyaseelan.In 2002, O.B.A commenced to contribute to the Teacher's Day. In 2000 and in 2003, Canada and London O.B.A were inaugurated respectively. London O.B.A handed over Rs.817500.00. to our college and it was used to establish the visual unit. Canada O.B.A funded to the students who are under less income through "Dr Gnani scholarship fund." Another two students were funded to Uzbekistan and Malasiya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A.G.M. period from 2004 till 2007.**

The first O.B.A DAY was proclaimed and celebrated by the O.B.A. The former principal Mr.S. Thandayuthapani was honoured.

**A.G.M period from 2007 till 2009.**



Multi media projector was handed over to the Sampanther Hall. Fund raising programe initiated and intensified during this period.

**A.G.M period from 2009 till March 2010.**

Students who are underless income were elected and rewarded from the scholarship Fund account as Rs 2000.00 for every month from 2010 by the O.B.A. Considerable amount received from London old students for constructing the pavilion. Funded to the college road race event. Funded by old student Mr. Manokaran to the students who obtained merit passes, on his mother's memorial.

**Mr. S.Barathinathan.**
**O.B.A Committee Member.**



## பழைய மாணவர் சங்கம்
## தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
## தொடரவுள்ள செயற்பாட்டுத்திட்டங்கள்

மின்னல் வேகத்தில் மாற்றம் கண்டுவரும் தற்கால தொழில் நுட்பத்திற்கு முகம் கொடுக்கக் கூடியதாகவும் காலத்தின் தேவைப்பாடுகளை சமாளிக்கும் முகமாகவும் எமது கல்லூரிச் சமூகமானது கட்டியெழுப்பப்படல் வேண்டும். இவற்றை செவ்வனே நெறிமுறைப்படுத்துவதற்கு உரிய இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு தேவையான நிதி மூலங்களையும் வளவாளர்களையும் தேடுவதில் பழைய மாணவர் சங்கத்திற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் கல்லூரியின் நலன் விரும்பிகளிற்கும் பாரிய கடப்பாடு ஒன்று உள்ளதை நாம் ஒவ்வொருவரும் நெஞ்சில் நிறுத்தி தகுந்த செயற்பாட்டில் இறங்கவேண்டும்.

தற்போதைய நிலையில் எமது கல்லூரியின் பால் தேவைப்படுகின்ற முன்னிலைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களை நிதிவழங்குனர்களும் நல்ல நிலையில் உள்ள எமது பழைய மாணவர்களும் கல்லூரி நலன் விரும்பிகளும் அறியும் பொருட்டு இங்கே முன்வைக்கின்றோம்.இத்திட்டங்கள் யாவும் நிறைவேற்றப்படுமாயின் எமது கல்லூரியானது தேசிய மட்டத்தில் கூடியளவு ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கும் என்பது திண்ணம். அவையாவன

01. வகுப்பறைக்கு ஓர் கணணி (Lap Top) (ரூபா 4.0 மில்லியன்)
02. கணணி ஆய்வுகூட விஸ்தரிப்புக்கு தேவையான மேலதிக கணணிகள் (ரூபா 2.0 மில்லியன்)
03. விளையாட்டு மைதானத்தில் ஓர் பார்வையாளர் அரங்கு (ரூபா 2.0 மில்லியன்)
04. கல்லூரியின் முற்றத்திற்கு கொங்கீறீற் கற்கள் பதித்தல் (1.5 மில்லியன்)
05. ஆரம்பப்பிரிவு வளாகத்திற்கு தேவையான 9 வகுப்பறைகளுடன் கூடிய மூன்று மாடிக்கட்டிடம் (மதிப்பீடு ரூபா 11.0 மில்லியன்)
06. 150 மாணவர்கள் தங்கிக்கற்கக்கூடிய மாணவர் விடுதி (ரூபா 25 மில்லியன்)
07. ஆய்வு கூடங்களை நவீனமயப்படுத்தலும் கணணி மயமாக்கலும் (ரூபா 4.0 மில்லியன்)
08. ஆரம்பபிரிவு வளாகத்தில் ஓர் சிறுவர் விளையாட்டு பூங்கா (ரூபா 1.5 மில்லியன்)
09. விளையாட்டு மைதான அபிவிருத்தி (ரூபா 2.0 மில்லியன்)
10. நிதிநிலைமையை அதிகரிக்கும் கலை நிகழ்ச்சி திட்டம்
11. கல்லூரியிலிருந்து விளையாட்டுமைதானத்திற்கு செல்வதற்கான மேம்பாலம் அமைத்தல் (ரூபா.1.0மில்லியன்)
12. பழைய மாணவன் ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு தடவையாவது தன்னால் இயன்றஉதவியை கல்லூரியின் மேம்பாட்டிற்கு நல்கவேண்டும். அதனை பழைய மாணவர்களிற்கு தெரியப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

**Eng.** தி.ஹரிதரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் சாதனை படைத்திருப்பின்
பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல் வசதியுடன் இருக்கும் பழைய மாணவர்கள் oba@trincohindu.sch.lk என்ற பழைய மாணவர் சங்க மின்னஞ்சலுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு வேண்டப்படுகிறீர்கள். தங்கள் முதல் மின்னஞ்சலில் உறுப்புரிமை இருப்பின் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய மாணவர் தினப்போட்டிகள்

திருக்கோணமலையில் அமைந்துள்ள பாடசாலைகளிடையே எமது பாடசாலையான தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமே மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

பாடசாலையின் முன்னேற்றத்தையும் சங்கத்தின் வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு பற்பல நிகழ்வுகளை ஏற்படுத்தி நடாத்திவருகிறோம். அதில் மிகமுக்கியமானது யூன் முப்பதாம் திகதி கொண்டாடப்படும் பழைய மாணவர் தினமே .... அன்றைய தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது. அதில் ஒன்றுதான் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் ஒவ்வொரு வருடமும் காலத்திற்கேற்ப இந்நிகழ்வுகள் சிறப்பாகவும், முற்போக்காகவும் நடாத்தப்பட்டு வருகிறது.

பழைய மாணவர்களை ஒன்று சேர்ப்பது மட்டுமல்லாது படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் அவர்கள் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டும் இவ்விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதே இதன் சிறப்பு ஆரம்பத்தில் கிறிக்கற் போட்டி மட்டுமே நடாத்தப்பட்டு வந்தது. பின்னர் காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்து, கரம், செஸ் என போட்டிகள் விரிவுபடுத்தப்பட்டன.

இதில் கிறிக்கற் போட்டியானது பாடசாலை மாணவர்களோடு மட்டுமல்லாது ஆசிரியர்கள் குழுவோடும் நடாத்தப்படுகிறது. இது ஆசிரியர்களிற்கும், பழைய மாணவர்களிற்கும் இடையில் ஒரு நல்லுறவை ஏற்படுத்த ஏதுவாக அமைகிறது. ஒரு வருடம் ஆசிரியர்கள் குழுவும், மறுவருடம் பழைய மாணவர்கள் குழுவும் என வெற்றி பெறுவதும் ஆரவாரித்து மகிழ்வதுமாக இப்போட்டி ஆரோக்கியமாக நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு வருடமும் அணியில் இடம்பெறும் பாடசாலை மாணவர்கள் குழுவிற்கு உற்சாகத்தையும் பயிற்சியையும் வழங்கும் நோக்கத்தோடும் பழையமாணவர்களிடமிருந்து அவர்கள் விளையாட்டு அனுபவங்களை கற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடும் கிறிக்கற், காற்பந்து, கூடைப்பந்து மற்றும் கரப்பந்து ஆகிய விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மாணவர்கள் குழுவிற்கும் பழையமாணவர்கள் குழுவிற்குமிடையே நடைபெற்று வருகிறது. அவை நாம் எதிர்பார்த்த நோக்கங்களை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டும் வருகிறது. இது எமக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

பழைய மாணவர்கள் தினம் என்ற ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற எண்ணம் தோன்றி அது கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது 2004ம் ஆண்டு யூன் 30ம் திகதியே அந்த வருடம் பாடசாலை ஆசிரியர்கள் குழுவிற்கும், பழைய மாணவர்கள் குழுவிற்கும் இடையில் பதினைந்து ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கற்போட்டி நடாத்தப்பட்டது. அதில் பழைய மாணவர்கள் குழு வெற்றிவாகையும் சூடிக்கொண்டது.

அதைத் தொடர்ந்து வந்த 2005ம் ஆண்டு பாடசாலைக்கு சோகமான ஆண்டாக அமையக் காரணமான எமது பாடசாலை மாணவர்கள் ஐவர் கடற்கரைக்கு அருகில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அமைத்துவிட அவ்வருடம் பழையமாணவர்கள் தினமானது அவர்களின் ஆத்ம சாந்திக்காக கைவிடல் ஆண்டாக அமைந்திருந்தது.

அதன்பின்னர் 2010ம் ஆண்டுவரை பழைய மாணவர்கள் தினமும், விளையாட்டு நிகழ்வுகளும் காலத்திற்கேற்ப சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் இவ்விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் மற்றும் உள்ளக விளையாட்டுக்கள் என்பவற்றை சேர்ப்பதற்கான யோசனையும் எம்மிடம் உள்ளது.

2009ம் ஆண்டு விளையாட்டு நிகழ்வுளில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்ற குழுக்கள், மற்றும் தனி நபர்களுக்கு தனித்தனியாக பெறுமதிமிக்க தங்கம், மற்றும் வெள்ளிப் பதக்கங்களும், கண்ணாடியாலான அழகுபடுத்தப்பட்ட கேடயங்களும் வழங்கப்பட்டது தனிச்சிறப்பு இது அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுமிருந்தது.

மேற்குறிப்பிட்ட பெறுமதிமிக்க பரிசில்களை கொள்வனவு செய்வதற்கு விளையாட்டில் ஆர்வமுள்ள பல பழையமாணவர்கள் தாமாக முன்வந்து உதவி செய்தார்கள் என்பது பெருமைமிக்க விடயமாகும். அதேபோல் போட்டிகளின் போது குளிர்பானம் வழங்குவதற்கும் பழையமாணவர்கள் சிலர் அனுசரணை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களிலும் எமது பழையமாணவர்களின் முழுமையான ஒத்துழைப்போடு இவ்விளையாட்டு நிகழ்வுகளை சிறப்பாக நடாத்துவதற்கு பழைய மாணவர் சங்கம் எதிர்பார்த்திருக்கிறது.

திரு.இ.அசோக்
நிர்வாக சபை உறுப்பினர்
பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆக்கத்திறனை விருத்தி செய்த "புத்தெழில் பிரவாகம் - 2010"

**நித்திலம்** கொழிக்கும் இத் திருமலையில் 113 அகவைகளை கடந்து அறிவொளி பரப்பி வரும் இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் "புத்தெழில் பிரவாகம் - 2010" ஆக்கத்திறனை விருத்தி செய்தது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு விடயமாகும்.



பழைய மாணவர் சார்பில் பார்வையாளராக கலந்து கொண்ட நான் யாரும் எதிர்பாராதவகையில் மாணவர்களின் ஆக்கத்திறன் சிறப்பாய் அமைந்திருந்ததை பார்த்து வியப்பும், **ஆனந்தமும்** அடைந்தேன். பாடசாலையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஐந்து (5)வயதில் சேர்த்து விடுகின்றனர். இப்பிள்ளைகள் அறிவுள்ளவர்களாகவும், திறன்விருத்தியுள்ளவர்களாகவும், அனுபவமுள்ளவர்களாகவும், ஒழுக்க முள்ளவர்களாகவும் வளர்க்கப்பட்டு சமூகத்தில் நல்ல மனிதர்களாக பெற்றோருக்குப் பெருமை சேர்க்கக் கூடியவர்களாக நல்ல தோர் மனிதவளமாக வரவேண்டு மென்பதே பெற்றோர்களது எதிர்பார்ப்பாகும். இத்தனையையும் பிள்ளைகளுக்கு ஒருமிக்க வழுங்கக் கூடிய ஒரே இடம் பாடசாலையாகும். எனவேதான் பாடசாலைகள் பிள்ளைகளை நல்ல மனிதனாகப் படைக்கும் ஒரு பயிற்ச்சிப்பாசறையாகும் என்று கூறுகின்றனர்.



ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் பிறப்பிலேயே ஒவ்வொரு திறன் இருக்கும் அதனை வெளிக் கொண்டு வருவதற்கு களமாக அமைந்தது இப்புத்தெழில் பிரவாகம்-2010 என்று கூறினால் அது மிகையாகாது. இக் கல்லூரியின் வெற்றிச் செல்நெறியின் ஒரு **சாரலை** சமூகத்திற்கு எடுத்துக் காட்டிய தொரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்திருந்ததையிட்டு இக் கல்லூரியின் பழையமாணவன் என்ற ரீதியில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொனர்வதில் இக்கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள். ஆகியோரின் கூட்டுச்சேர்க்கையும், ஒற்றுமையும், கூட்டுப்பொறுப்பும் எதிர்காலத்தில் இக்கல்லூரியின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்ற அடையாளமாக நான் கருதுகின்றேன். மூன்று கிழமைகளில் மட்டுமே திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டு. ஆரம்பப்பிரிவு விஞ்ஞானம், கணிதம், கலை சித்திரம், சங்கீதம், ஆங்கிலம், வரலாறு, வர்த்தகம், சமயம், தமிழ்மொழி, தகவல்தொழில் நுட்பம், பௌதீகவியல், இராசயனவியல், தாவரவியல், விலங்கியல், அரும்பொருட்காட்சியகம், மாதிரிவங்கி, பூகோளவியல், இணைப்பாடச் செயற்பாடு, பொதுச்செயற்பாடு இன்னும் பல துறைகள் உள்ளடக்கப்பட்டு பூரணத்துவமாக செய்யப்பட்டது பாராட்டுக்குரியதாகும்.






அத்தோடு நின்றுவிடாது திருமலையிலுள்ள அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பிரயாணச் செலவு இன்றி கைக் கெட்டிய தூரத்தில் சீமெந்து ஆலையின் அமைப்பையும், விமானப்படையின் விமானங்களின் மாதிரியையும், கனிப்பொருள் உற்பத்தி, போன்ற அரிய காட்சிகளையும் கண்டுகளிப்பதற்கு காட்சிப்படுத்தியது இப்புத்தெழில் பிரவாகம் - 2010 ஆகும்.

சாரணர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் கூட்டுச் சேர்ந்து தொங்குபாலம் அமைத்தமை இக்கல்லூரிக்கு எதிர்காலத்தில் பாதசாரிகள் கடவை போதுமானது ஒன்று அல்ல மேம்பாலம் தேவை என்பதை கல்விச் சமூகத்திற்கு வலியுறுத்தியிருக்கிறார்கள்.



இக்கல்லூரியின் பழையமானவன் என்ற ரீதியில் இப்பாடசாலையின் அதிபரையும், பிரதிஅதிபர்களையும், பகுதித்தலைவர்களையும், ஆசியர்குளாத்தையும் கல்வி சாராஊழியர்களையும் பாராட்டுகின்றேன் இச் **"சாரல்"** செய்தி மடலில் எனது **சாரலையும்** சேர்த்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.



திரு.ச.சிறிதரகுமார்
(நிர்வாக சபை உறுப்பினர்)
பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை பாராட்டுதலும் கௌரவித்தலும்

**கல்வி பொது தராதர சாதாரண பரீட்சை 2009.**

இக் கல்லூரியில் 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையில் 161 மாணவர்கள் தோற்றி அவர்களில் 150 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகமை பெற்றுள்ளார்கள். இம் மாணவர்களை பழைய மாணவர் சங்கம் நிறைவோடு பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. முதல் பதினேழு மாணவர்களை எடுத்து நோக்குகையில் முறையே நான்கு மாணவர்கள் ஒன்பது அதிவிஷேட சித்திகளையும், அடுத்த நான்கு மாணவர்கள் எட்டு அதிவிஷேட சித்திகளையும், மற்றைய ஒன்பது மாணவர்கள் ஏழு அதிவிஷேடசித்திகளையும், சிறந்த பெறுபேறுகளாகப்பெற்று அனைத்துப் பாடங்களிலும் சித்தியெய்தியமைக்காக பழைய மாணவர் சங்கம் தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ஆங்கில மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றிய 23 மாணவர்களும் அனைத்துப் பாடங்களிலும் சித்தி எய்தியமை பாராட்டுக்குரிய விடயமாகும். அத்துடன் இவர்களில் ஒன்பது அதிவிஷேட சித்திகளை பெற்று ஒரு மாணவனும், எட்டு அதிவிஷேட சித்திகளைப் பெற்று மூன்று மாணவர்களும், ஏழு அதிவிஷேட சித்திகளைப் பெற்று மூன்று மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் அனைத்துப்பாடங்களிலும் சித்தி எய்தியமைக்காக பழைய மாணவர்சங்கம் தனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இப் பெறுபேறுகளில் மாணவன் செல்வன் இ.நீதன் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் முறையே முதலாம், ஆறாம் நிலையினை அடைந்தமைக்காக பழைய மாணவர் சங்கம் தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றது.

**கல்விப் பொது தராதர உயர்தரப்பரீட்சை 2009**

2009ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இக்கல்லூரியில் இருந்து தேசிய மட்டதெரிவில் முறையே கணிதப் பிரிவில் நான்கு மாணவர்களும் வர்த்தக பிரிவில் இரண்டு மாணவர்களும் விஞ்ஞானப்பிரிவில் ஒரு மாணவனுமாக மொத்தம் ஏழு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். மேலும் இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 114 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கான அடிப்படைத் தகுதியினை பெற்றுள்ளார்கள் இவர்களில் அறுபது மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியினை பெற்றுள்ளார்கள் இம்மாணவர்கள் அனைவருக்கும் சங்கம் தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றது. தேசிய மட்டத்தில் தெரிவான ஏழு மாணவர்களையும் பழைய மாணவர்சங்கம் கோல்மெடல் அளித்து கௌரவிப்பதற்கான தீர்மானம் ஒன்று செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக பழைய மாணவன் திரு மனோகரன் என்பவரால் 150000/= நிதித்தொகை ஒன்று பழைய மாணவர்சங்க வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதனை சங்கம் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

திரு.ச. பாரதிநாதன்
நிர்வாக சபை உறுப்பினர், பழைய மாணவர் சங்கம்

## OLD BOYS ASSOCIATION COMMITEE MEMBERS - 2010




**Seating Left to Right :-** Mr.R.Kailavasan (Asst. Secretary), Mr.N.Kumanan ( Vice President), Eng .T.Haritharan (Secretary), Mr.M.Rasarathinam (President), Mr.R.Subramaniam (Vice President), Mr.S.Parameswaran (Treasurer), Mr.S.Barathinathan(Member), Dr.S.Kokulan (Memer)

**Standing Left to Right :-** Mr.T.Bramenthiran(Member), Mr.S.Sivakumar(Member), Mr.T.Sivanathan (Member), Mr.S.Jeyakumar (Member),Mr.S.Jegatheeswaran(Member), Mr.K.Arulvaratharajah (Member) , Mr.N.Niththiyakumar (Member), Mr.S.Sarveswaran (Asst.Treasurer), Mr.S.Sritharakumar(Member), Mr.I.Ashok (Member), Mr.R.Hareharan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள பாடசாலை விளையாட்டு மைதான பார்வையாளர்கள் அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 26.06.2010





## பழைய மாணவர் தினப் போட்டிகள் 27.06.2010










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

ஒரு முறை பூசி
வித்தியாசத்தை உணருங்கள்

## SPRAY PAINT HOUSE

- உடனடியாக
- தேவையான அளவு
- நீங்கள் விரும்பும் நிறம் / வர்ணம்
- நீடித்த உழைப்பு
- கூடிய உள்ளடக்க பரப்பு
- மிருதுவான தோற்றம்




**Authorised Dealers : Sunny Paint Auto Lacguer and Debeer paint Computer (Mixing) Lucguer, Emuision Paint, Colour Mixing, Kenlux Enamal Paint**

**319, Main Street, Trincomalee, 026 2221763**

*With best compliments from:*




# Villa Hotel

***An Oasis on the white sand ........***

For the discerning traveler, business visitor
or a family on holiday.....
overlooking the Indian Ocean ...
in the best part of the city with peaceful & quit setting ....
Luxurious rooms with modern amenities......
restaurant serves mouth watering cuisine to make
your stay unforgettable.
No. 22A, Lower Road, Orr's Hill, Trincomalee.
Tel./Fax : 026 2222284

***Best wishes on your OBA day***

## Hatton National Bank

## Hatton National Bank
## Trincomalee Branch


*"Your Partner in Progress"*

***No. 59, Ahambaram Road, Trincomalee***
***Tel : 026 2222572, 026 2221092, 026 2222801***
***Fax : 026 2222610***
***E-mail : trinco@hnb.lk***

*With best compliments from:*

## Now newly Introduced
## Banner Printing
## Large Format Printings

**Low Cost**
**Appropriate Speed Service**
**High Quality**



# SHAN PRINTERS

**306, Central Road, Trincomalee.**
**T.P : 026 2221547**
**Mobile : 077 7296061**
**E-mail : shanprinters@rocketmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org